**2018ஆம் வருடம் ஜூன் மாதம் 28.06.2018ம் நாள் வியாழக்கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**
**முன்னிலை : திரு. வே. கிருஷ்ணகுமார், டி.சி.இ.,**
**நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ)**

**பொருள் எண் : 1**

இந்நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) அவர்களின் மே 2018ம் மாத நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

பதிவு செய்யலாம்

**பொருள் எண் : 2**

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் வீடுவீடாக குப்பைகளை பிரித்தெடுத்து சேகரித்தல், சேகரிக்கப்பட்ட குப்பைகளை உரக்கிடங்கில் கொண்டு சென்று சேகரித்தல், மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரித்தல், சாக்கடை சுத்தப்படுத்தும் பணி, கொசு ஒழிப்பு பணி ஆகியவற்றிற்கு ஈடுபடுத்த இந்நகராட்சிக்கு 106 எண்ணிக்கையில் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் 109 எண்ணிக்கையிலான தற்காலிக துப்புரவு பணியிடங்களை வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.47283/2000/ஜெ3 நாள் 15.09.2000ன் படி அனுமதிக்கப்பட்டு இவ்வலுவலக கோப்பு ந.க.எண்.5845/2003/எச்1, 5844/2003/எச்1, 5846/2003/எச்1–ன் படி தொடர் நீட்டிப்புக்கான அனுமதி பெற்றே மொத்தம் 215 துப்புரவு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். 02.12.2008 முதல் தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில் 11.65 ச.கி பரப்பளவு கொண்ட இந்நகராட்சியின் மக்கள் தொகை 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 68619 என்பதன்படி பெருகிவரும் மக்கள் தொகை உள்ளது, மாவட்ட தலைநகரம் என்பதனால் ஊர்ந்து செல்லும்(FLOATING) பொதுமக்களின் அளவு நாளொன்றுக்கு 40000 க்கும் மேல் உள்ளது. தற்பொழுது அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் 64 எண்ணிக்கை அவசிய துப்புரவு பணியாளர்களின் பணியிடங்கள் காலியாக உள்ளது, 21 துப்புரவு பணியாளர்கள் மாற்று பணிகளுக்கும் செல்கின்றனர், இதனால் வீடு வீடாக குப்பைகள் பிரித்து வாங்கும் பணிகளை கையாளுவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே பொதுமக்களிடத்தில் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுவதோடு, பலவித தொற்றுநோய்களும் பரவ வாய்ப்பு உள்ளது. எனவே நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை துணை அரசானை (நிலை) எண்: 101 நாள்: 30.04.1997 திருத்தி அமைக்கப்பட்ட அளவு கோளின் படி இன் படி துப்புரவு பணியாளர் பணியிடங்களை அரசானைப்படி அனுமதிக்கப்பட துப்புரவு பணியாளர்களில் காலிப்பணியிடங்களை மட்டும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அனுமதிக்கும் பட்சத்தில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் வீடு வீடாக குப்பைகளை பிரித்து வாங்கி குப்பைகளை இருதியாக்கம் செய்து நகராட்சியினை தூய்மையாக பராமரிக்க ஏதுவாக இருக்கும்.

**தற்போதைய நிலை :**

| | |
|---|---|
| 2011–ம் ஆண்டு மக்கள்தொகை | 68619 |
| நகரில் உள்ள மொத்த தெருக்கள் | 350 |
| நகரின் பரப்பளவு | 11.65 sq.km |
| மொத்த குடியிருப்புகள் | 16595 |
| கடைகள் உள்ளிட்ட வணிக நிறுவனங்கள் | 5142 |
| தினசரி வந்து செல்வோர் | 40000 |

அரசாணை நிலை எண். 101 / 97, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள். 30.04.1997–ன் படி

**தேவையான துப்புரவு பணியாளர்கள் :**

| வ. எண். | அரசாணை 101–இன்படி | நிர்ணய அளவுகோல் |
|---|---|---|
| 1) | தள்ளுவண்டியில் 150 குடியிருப்புகளுக்கு 2 நபர்கள் வீதம் 3000 குடியிருப்புகளுக்கு குப்பையினை பிரித்து வாங்கிட (20 x 150 = 3000) 20 x 2 = 40 | 40 |
| 2) | 1200 குடியிருப்புகளுக்கு 1 ஆட்டோ, 3 பணியாளர்கள் வீதம் குப்பையினை பிரித்து வாங்கிட 9600 குடியிருப்புகளுக்கு (8*1200 = 9600) 8*3=24 | 24 |
| 3) | 400 குடியிருப்புகளுக்கு 1 பேட்டரி வாகனம், 3 பணியாளர் வீதம் குப்பையினை பிரித்து வாங்கிட 4000 குடியிருப்புகளுக்கு (400*10=4000) 10*3=30 | 30 |
| 4) | பெரிய லாரி 7–க்கு 4 நபர்கள் வீதம் 7 லாரிக்கு (7 x 4 = 12) | 28 நபர்கள் |

| | | |
|---|---|---|
| 5) | டம்பர் லாரி 2–க்கு 2 நபர்கள் வீதம் 2 லாரிக்கு (2 x 2 = 4) | 4 நபர்கள் |
| 6) | 27 சமுதாய கழிப்பிடத்திற்கு : 15 நபர்கள்<br>பேருந்து நிலையம் பொது கழிப்பிடம் : 4 நபர்கள் | 19 நபர்கள் |
| 7) | மார்கெட் பகுதிக்கு 2 நபர்கள் | 2 நபர்கள் |
| 8) | மாநில நெடுஞ்சாலைகள் , நகர்புற சாலைகள், உட்புற சாலைகள் தூய்மை செய்யவும் பெருக்கவும் தேவைப்படும் நபர்கள் | 25 நபர்கள் |
| 9) | நகர்பகுதியில் உள்ள கழிவு நீர்கால்வாய்கள் தூய்மை செய்யு தேவைப்படும் நபர்கள் | 30 நபர்கள் |
| 10) | B Grade உள்ளூர் மற்றும் வெளியூர் பேருந்து நிலையம் 2 எண்ணிக்கைகளுக்கு 16 மணி நேரம் தூய்மை பணி மேற்கொள்ள தேவைப்படும் பணியாளர்கள் | 40 நபர்கள் |
| 11) | Compost – 10 டன் குப்பைக்கு 1 நபர் வீதம் 32 டன்னுக்கு 3 நபர்கள் | 3 நபர்கள் |
| | மொத்தம் : | 245 நபர்கள் |

**துப்புரவு பணியாளர்கள் தேவை விபரம் :**

| | | |
|---|---|---|
| 1) | 2017 மக்கள் தொகைக்கு அடிப்படையில் அரசாணை 101–இன்படி தருமபுரி நகராட்சிக்கு தேவைப்படும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை (அளவுகோலின்படி) | 245 நபர்கள் |
| 2) | 1997 மக்கள் தொகை அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் | 215 நபர்கள் |
| 3) | தற்போது பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை | 151 நபர்கள் |
| 4) | 101 அரசாணை அளவுகோலின்படி பணியாளர்கள் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களின் பற்றாக்குறை வித்தியாசம் | 94 நபர்கள் |
| 5) | தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களுக்கும் தற்பொழுது பணிபுரியும் பணியிடத்திற்கும் பணியாளர்களின் பற்றாக்குறை வித்தியாசம் | 64 நபர்கள் (காலியிடம் ) |

1997 மக்கள் தொகை அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்கள் 215 பேரில் தற்போது 151 பணியாளர்கள் மட்டுமே பணியில் உள்ளதாலும், 64 துப்புரவு பணியாளர்களின் பணி இடங்கள் காலியாக இருப்பதாலும் துப்புரவு பணியில் தொய்வு ஏற்படும் நிலை உள்ளது.

நகராட்சியில் நிகர செலவினம் 49 சதவீதத்திற்கு அதிகமாக இருப்பதால் காலிப் பணியிடங்கள் நிரப்ப தடையாணை உள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண். 27/B3/2012 நாள். 06.01.2012–ன்படி திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை தனியார் மூலம் செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆகவே தருமபுரி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை சிறப்புடன் செயல்படுத்தும் வகையில் தற்போது காலியாக உள்ள 64 துப்புரவு பணியாளர்கள் பணியிடங்களுடன் கூடுதலாக 30 துப்புரவு பணியாளர்கள் சேர்த்து மொத்தம் 94 துப்புரவு பணியாளர்கள் தேவை படுகின்றனர், நகராட்சி நிதிநிலையினை கருத்தில் கொண்டு அரசாணை எண். 101 / 97, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 30.04.1997–ன் படி அனுமதிக்கப்பட்ட பணியாளர்களில் தற்போது காலியாக உள்ள 64 காலி பணியிடங்களை மட்டும் அரசு அனுமதிக்கும் பட்சத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயம் செய்யும் தினக்கூலி ஊதிய விகிதத்தில் நியமித்து செயல்படுத்தவும், மேற்படி பணியை சுய உதவிகுழுக்கள் மூலம் மேற்கொள்ள அரசின் அனுமதி கோரி கருத்துரு அனுப்பவும், மேற்படி திட்டம் செயல்படுத்துவதற்கு ஆகும் செலவினத்தை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பயனீட்டாளர் கட்டணத்தில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 3**

தருமபுரி நகராட்சிக்கு சொந்தமான கடைகள் 31.01.2018, 14.02.2018, 28.02.2018 ஆகிய தேதிகளில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மொத்தம் 47 கடைகளில் 15 கடைகள் மட்டும் அரசு மதிப்பைவிட கூடுதலாக ஏலம் கோரப்பட்டதால் மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு ஏலம் உறுதி செய்யப்பட்டது.

இதில் சந்தைப்பேட்டை ரோடு, இப்ராஹிம் ரோடு, ஜி.எம் தியேட்டர் ரோடு,பென்னாகரம் ரோடு ஆகிய இடங்களில் உள்ள 32 எண்ணிக்கையிலான கடைகளுக்கான பத்தி எண்1ல் உள்ள தேதிகளில் நடைபெற்ற ஏலத்தில் எவரும் ஏலம் எடுக்க முன்வராததால் பணி உத்தரவு அளிக்க முடியாத சூழல் உருவாகியுள்ளது.

இந்நிலையில் பொதுமக்கள், தருமபுரி நகர வியாபாரிகள் சங்கம், தருமபுரி அவர்களிடமிருந்து 13.11.2017 அன்று பெறப்பட்ட விண்ணப்பத்தின்படி கீழ் வரும் கடைகள் அனைத்தும் பேருந்து நிலையத்தில் இருந்து வெகு தூரத்தில் வெளிபுறமாக

அமைக்கப்பட்டுள்ளதால் ஏலத்திற்கு முன்வைப்பு தொகை ரூ.3,00,000/– ஆக உள்ளதை குறைத்து கொடுக்ககோரி தெரிவித்துள்ளனர்.

உள்ளூர் தனியார் கடைகளின் வாடகை விவரங்கள் பெறப்பட்டுள்ளது.கீழ்வரும் கடைகள் இதுநாள் வரை ஏலம் போகாமல் உள்ளதால் நகராட்சிக்கு நிதி இழப்பு என தணிக்கையில் ஆட்சேபிக்க வாய்ப்புள்ளது. எனவே முன்வைப்பு தொகையினை குறைத்து கீழ்காணுமாறு நிர்ணயம் செய்து ஏல விளம்பரம் செய்யவும், ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | குத்தகை இனம் விவரம் | கடை எண் | அரசு மதிப்புமாத வாடகை .ரூ | தனியார் கடைகள் வாடகை ரூ. | முன்வைப்பு தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | சந்தைப்பேட்டைரோடு (ஆதரவற்றோர்விடுதிமுன்புறம்) | 13, 15 | 5449 | 3500 | 100000 |
| 2 | சந்தைப்பேட்டைரோடு (வாரச்சந்தை முன்புறம்) | 17, 18, 19, 20 | 4086 | 3500 | 100000 |
| 3 | நபி தெரு (நகர்புற சுகாதார மையம் அருகில்) | 1, 2 | 7533 | 1500 | 100000 |
| 4 | இப்ராஹிம் ரோடு | 1, 2, 3, 4, 5 | 8257<br>6346 | 3000 | 100000<br>100000 |
| 5 | பென்னாகரம் ரோடு | 1, 2, 3, 4,<br>5, 6, 7, 8 | 6822 | 2500 | 100000 |
| 6 | சாலை விநாயகர் கோவில் ரோடு (ஜி.எம்.தியேட்டர்ரோடு) | 1, 2, 3, 4, 5,<br>6, 7, 8, 9, 10 | 9475<br>9694 | 2500 | 150000<br>150000 |
| 7 | முகமதலி கிளப்ரோடு வணிக வளாகம் | 12 | 22900 | 10000 | 275000 |

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 4**

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு 4 சந்தைப்பேட்டை ரோட்டில் உள்ள பழைய ஆடு அடிக்கும் தொட்டி கட்டிடம் பழுதடைந்த நிலையில் இருந்த இக்கட்டிடம் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளது என உதவிப் பொறியாளர் குறிப்பில் தெரிவித்துள்ளார். 938 ச.அடி உள்ள இந்த கட்டிடத்தின் வணிக வளாகமாக மாற்றி பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 5**

இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களில் வாகன முன்பணம் வழங்க கீழ்கண்ட பணியாளர்கள் விண்ணப்பித்துள்ளனர். அரசு ஆணை எண் 719 நிதித்துறை நாள் 13.10.1993 மற்றும் 485 நிதித்துறை நாள் 13.01.2005, 469 நிதி (சம்பளம்) துறை நாள் 22.02.2009ன் படி வாகன முன்பணம் வழங்கம் 9 சதவீதம் வட்டியுடன் 60 தவணைகளில் பிடித்தம் செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | எஸ். முருகன் | SS | 64,910 |
| 2 | பி. மாதையன் | SS | 64,590 |
| 3 | மு. சரவணன் | SS | 74,286 |
| 4 | இளங்கோவன் | SO | 75,000 |
| 5 | கே. பழனிசாமி | OA | 75,000 |
| 6 | விஜயானந்தம் | Driver | 71,934 |
| 7 | மு. மணிவண்ணன் | J.A | 68,496 |

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 6**

தருமபுரி நகராட்சியின் ஓராண்டு சாதனைகள் தொடர்பான விளம்பரங்கள் தினபூமி மற்றும் தினதந்தி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு கீழ்கண்டவாறு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. தினதந்தி ரூ.11,907/–
2. தினபூமி ரூ.10,500/–

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 7**

நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை மூலமாக Centralized Server Implement செய்யப்பட்டு நகராட்சிகளில் பணிபுரியும் அனைத்து பிரிவு எழுத்தர்களுக்கு அவர் அவர்களின் Userல் பட்டியல்களை மற்றும் Demand Notice Print எடுத்துக் கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது பிரிவு எழுத்தர்களுக்கு கணினியுடன் பிரிண்டர்கள் வைக்க வேண்டும். அதற்கான 12 எண்ணிக்கை பிரிண்டர்கள் வாங்க ஏற்படும் தோராய செலவினம் ரூ.3.50 லட்சம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

1. Canon Scanner Lide 220 - 3 Nos.
2. HP Laser 1020 - 10 Nos.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 8**

மாண்புமிகு உயர்கல்வி துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 28.09.2017 அன்று நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் 07.10.2017ல் நடைபெறும் பாரத் ரத்தனா டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா முன்னிட்டு அன்னசாகரம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் நினைவு நுழைவாயில் அமைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. எனவே, இப்பணியினை அவசர அவசியம் கருதி நகராட்சியின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.டி.எஸ்.ஜப்பார் அவர்கள் மூலம் ரூ.8.20 லட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொண்டமைக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் : 9**

இந்நகராட்சி வார்டு எண் 1 ரத்தினம் தெருவில் உள்ள சாலை மிகவும், பழுதடைந்துள்ளதால் பள்ளிக்கு செல்லும் மாணவ, மாணவியர், பொது மக்கள், இரு சக்கர வாகன ஓட்டிகள் மிகவும் சிரமமாக உள்ளதால் இச்சாலையினை புதியதாக அமைத்து தருமாறு கோரியுள்ளார்கள். எனவே, இச்சாலையினை பொது நிதியின் கீழ் அமைக்க ரூ.2.60 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 10**

நகராட்சி நிர்வாக ஆணையர் சேப்பாக்கம் சென்னை அவர்களின் ஆய்வு கூட்டத்தில் நகராட்சி பகுதிகளில் உள்ள பூங்கா மற்றும் விளையாட்டு திடலில் சேகரிக்கப்படும் மக்கும் குப்பையினை அதே இடத்தில் உரமாக தயாரிக்க கட்டுமான பணிகள் மேற்கொண்டு உரம் தயாரிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டதின் பெயரில் கீழ்கண்ட இடங்களில் உரம் தயாரிக்க கட்டுமான பணிகள் செய்யும் பணி அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.எம்.அழகேசன் அவர்கள் மூலம் பணியினை ரூ.3.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொண்டமைக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. பலப்பை குட்டை பூங்கா Tub Method
2. ராஜகோபால பூங்கா Tub Method
3. ASTC விளையாட்டு திடல் Syntex Tank Method

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 11**

இந்நகராட்சி வார்டு எண் 25 சாலை வினாயகர் கோயில் சாலை குறுக்கு தெரு மிகவும் பழுதடைந்துள்ளதால் இச்சாலையில் தினமும் பள்ளி மாணவ, மாணவியர்கள், பொது மக்கள், இருசக்கர வாகன ஓட்டிகள், தினமும் ஆயிரக்கணக்கானோர் சென்று வருகின்றார்கள். இச்சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் இவற்றினை சரி செய்து தருமாறு பொது மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளதால் மேற்கண்ட பணியினை பொது நிதியில் இருந்து ரூ.2.30 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 12**

இந்நகராட்சியில் 2013–2014ம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் சாலை வினாயகர் கோவில் சாலையில் உள்ள நகராட்சி பள்ளியில் புதியதாக பள்ளிக் கட்டிடம் ரூ.25.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. மேற்கண்ட கட்டிடத்திற்கு வர்ணம் பூச்சுதல், மின் விளக்கு பணிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால் அதற்காக ஏற்படும் செலவின தொகை ரூ.7.50 லட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 13**

நகராட்சி நிர்வாக ஆணையர் சேப்பாக்கம் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.30322/2012/இ3 நாள் 03.04.2018ல் நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலக கட்டிடம் தற்போது வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. தற்போது நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு என்று புதிய கட்டிடம் கட்டப்பட்டு வருகின்றது அதற்கான நகராட்சிகளின்

தரத்திற்கு ஏற்பபங்கு தொகையினை செலுத்த கோரியுள்ளார். தருமபுரி நகராட்சியின் பங்கு தொகை மூன்றாவது தவணை ரூ.7,80,000/—ஐ செலுத்தியதும் முதல் மற்றும் இரண்டாம் தவணையின் கீழ்கண்டவாறு செலுத்தியதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | தவணை விவரம் | தொகை | BPV | தேதி |
|---|---|---|---|---|
| 1. | முதல் தவணை | ரூ.15.00 லட்சம் | 14122 | 24.06.2014 |
| 2. | இரண்டாம் தவணை | ரூ.21.00 லட்சம் | 15577 | 16.03.2016 |
| 3. | மூன்றாவது தவணை | ரூ.7.80 லட்சம் | 0035 | 27.04.2018 |

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட மூன்று தவனை தொகை ரூ.43.80 லட்சம் வழங்கியமைக்கு மன்ற அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 14**

தமிழ் நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் **(TURIP)** 2018—2019ன் கீழ் தருமபுரி நகராட்சி பகுதியில் தார் சாலைகள், சிமெண்ட் சாலைகள் மற்றும் கழிவு நிர் கால்வாய் அமைத்திட ரூ 500.00லட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டி இவ்வலுவலக கடித ந.க.எண்465/2018/இ1. நாள்17.05.2018 ன் படி கருத்துரு அனுப்பப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்,12981/2018/இ3 நாள்27.05.2018ல் அரசு முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநிர் வழங்கல் துறை அவர்களின் தலைமையில் 12.05.2018 அன்று நடைபெற்ற **TURIP** 2018—2019க்கான திட்ட அனுமதி வழங்கும் குழுவில் தருமபுரி நகராட்சிக்கு சாலைப்பணிகளை மேற்கொள்ள கீழ்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| மதிப்பீட்டு தொகை (ரூ லட்சத்தில்) | தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி (ரூ லட்சத்தில்) | மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழ மானிய நிதி (ரூ லட்சத்தில்) | மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி (ரூ லட்சத்தில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| **500.00** | **1.90** | **1.50** | **1.10** | **0.50** |

எனவே மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டின்படி கீழ்கண்ட விவரப்படி சாலைப்பணிகள் மேற்கொள்ள ரூ500.00இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு நிரவாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு திட்ட மதிப்பீட்டிட சமர்ப்பிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எ ண் | வார்டு எண் | பணியின் பெயர் | சாலையின் தன்மை | சாலையின் நீளம் கி.மீட்டரில் | அகலம் | மதிப்பீடு (ரூலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| | | சிப்பம்—1 | | | | |
| 1 | 1,4,5,713, 17, 18, 21 | தார்சாலைகள் அமைத்தல் மற்றும் மறுசீரமைப்பு செய்தல்— 1).பழைய தருமபுரி ரோடு, 2).இப்ராகீம் குறுக்கு தெரு, 3).ஜாகீதார் ரோடு, 4).மாரியம்மன் கோவில் தெரு, 5).அப்பாவு நகர் குறுக்கு தெரு, 6).முகமது அலி கிளப் ரோடு, 7).ராஜகோபால் தெரு மற்றும் அண்ணாதுரை குறுக்கு தெரு, 8).எம்.ஏ.தங்கவேல் தெரு முதல் அப்பாஸ் தெரு, | தார் சாலை மற்றும் மழை நீர் கால்வாள் | 3.053 | 6.50 | 200.00 |
| | | சிப்பம்—2 | | | | |
| 2 | 26,27,28 ,30,33,3 3, | 1).கொல்லஅள்ளி ரோடு, 2).காந்தி நகர் மெயின் மற்றும் கிராஸ் தெரு, 3).நெசவாளர் காலனி, 4).மதுராபாய் திருமண மண்டபம் ரோடு, 5).எரங்காட்டுக் கொட்டாய் ரோடு, 6).தீத்தி அப்பாவு தெரு, | தார்சாலை மற்றும் மழை நீர் கால்வாய் | 3.345 | 6.40 | 200.00 |
| | | சிப்பம்—3 | | | | |
| 3 | 8,9,16,20 ,20,24,2 6,26,29, 33. | 1).அஞ்சகாரன் தெரு, 2).வட்டார வளர்ச்சி காலனி, 3).தெற்கு இரயில்வே லையின் கிராஸ் தெரு, 4).குறுக்கு தெரு—1, 5).குறுக்கு தெரு—2, 6).சத்திரம் மேல் தெரு, 7).சாலை வினாயகர் ரோடு, 8).குன்செட்டி குளம் தெரு, 9).சின்னவாத்தியர் தெரு,10). வீ.ஓ.சி.தெரு. | சிமெண்ட சாலை | 1.200 | 4.40 | 100.00 |

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.50.00 இலட்சத்தினை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தனி அலுவலர்**
**மற்றும் ஆணையாளர் (பொ)**
தருமபுரி நகராட்சி.

**2018ஆம் வருடம் ஜூன் மாதம் 28.06.2018ம் நாள் வியாழக்கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட தீர்மான நகல்**

| **பொருள் எண்கள்** | **தீர்மான எண்கள்** | **நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம்** |
|---|---|---|
| பொருள் : 1 | 451 | பதிவு செய்யப்பட்டது |
| பொருள் : 2 முதல் 9 வரை | 452 முதல் 459 வரை | அனுமதிக்கப்பட்டது |
| பொருள் : 10 | 460 | பதிவு செய்யப்பட்டது |
| பொருள் : 11 முதல் 14 வரை | 461 முதல் 464 வரை | அனுமதிக்கப்பட்டது |

தனிஅலுவலர்(ம) ஆணையாளர்(பொ)
தருமபுரி நகராட்சி.